O.S.107 -2024

## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.107/2024

வாதி தரப்பு 1வது சாட்சி சந்திரசேகரன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சந்திரசேகரன் | வயது | : | 63/2026 |
| தகப்பனார் பெயர் | : | ராமையா | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | ரியல் எஸ்டேட் |

நாள்-17.06.2026

வா.சா.1

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அப்பார்ட்மெண்ட் விற்ற விபரத்தை எனது குறுக்கு விசாரணையில் தான் முதன் முதலில் சொல்லியுள்ளேன் என்றாலும், வழக்கு அறிவிப்பிலோ, வழக்குரையிலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) நான் நேரடியாக விற்காமல் அதிகார முகவர் மூலமாக விற்றதற்கு காரணம், அந்த அதிகார முகவர் சொத்துக்களை வாங்கி, விற்கும் தொழில் செய்து வருபவர் என்பதால்.

3) 06.03.2023-ல் இந்த அசல் ஒப்பந்தத்தை போட்டேன்.

4) அதிகார முகவர் இந்த சொத்தை 01.11.2023-ல் விற்றார். 1ம் பிரதிவாதிக்கு நான் இந்த பணம் ரூ.70,00,000/- த்தை 05.07.2023-ல் கொடுத்தேன்.

5) அதிகார முகவருக்கு நான் கொடுக்க வேண்டிய பணத்திற்காக, அதிகார பத்திரத்தை எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல.

6) அசல் அக்ரிமெண்ட் தேவையில்லை என்பதால், நான் கிழித்து போட்டதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

7) இந்த வழக்கிற்காக இந்த ஒப்பந்தம் பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

8) இந்த ஒப்பந்தத்திற்கான கிரைய தொகை ரூ.70,00,000/- ஆகும். கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய தொகை எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது.

9) வா.சா.ஆ.13ல் கிரைய தொகையாக ரூ.82,50,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள கிரைய தொகை மற்றும் சங்கதிகளை இப்போதுதான் பார்க்கிறேன்.

10) ஆவணங்களில் கண்டுள்ள விபரங்களின் உண்மை தன்மையை கண்டறிய அந்த பவர் ஏஜெண்டை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான்.

11) வா.சா.ஆ.12-ல் 2-வது பக்கத்தில் கிரைய தொகையை பவர் ஏஜெண்டே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மு.மா.நீ.,

12) வா.சா.ஆ.11-ல், 2-வது பக்கத்தில் ஐசிஐசிஐ வங்கி காசோலை மூலமாக எனக்கு பணம் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பணம் வங்கி கணக்கில் வரவு செய்யப்பட்டதை காட்டக்கூடிய வங்கி கணக்கு விபரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

13) சாட்சி ஆனந்தனை சாட்சியம் அளிக்க பிரதிவாதிகள் தடுப்பதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விசயங்கள் உண்மைக்கு மாறானது என்று சொன்னால் சரியல்ல.

14) ஆனந்தனை நான் பொய்யாக சாட்சியம் அளிக்க சொன்னதால்தான் அவர் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

15) என் மீது தவறை மறைப்பதற்காகத்தான் பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றம் சாட்டுகிறேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தை தூய கரங்களுடன் அணுகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

16) நான் சொல்வதுபோர் எந்தவொரு அப்பார்மெண்டையும் நான் விற்கவில்லை என்றாலும், அதன் மூலம் பணம் ஏதும் எனக்கு வரவில்லை என்றாலும், அதன் மூலமாக 1ம் பிரதிவாதிக்கு நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.